06.02.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 257/2014</u>

அ.சா.11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | | |
| த/பெ | தர்மலிங்கம் | | |
| கிராமம் | வி. ஆண்டிபாளையம் | தொழில் | சுமோட்டோ ஊழியர் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 38/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 06.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போ து சென்னையில் சுமோட்டோ ஊழியராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன பாளையா என் சித்தப்பா ஆகும். சாட்சிகள் யுவராஜ் மற்றும் வசந்தகுமாரி ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 09.09.2009 ம் வருடம் இரவு சுமார் 9. 30 மணியளவில் எனக்கு ஒரு போன் மூலம் தகவல் வந்தது. டி. ஆண்டிபாயைம் ரோட்டில் வெள்ளாகுளம் அருகில், பூரண சந்திரன் நிலத்திற்கு அருகில் எங்கள் சித்தப்பா பாளையா வெட்டு காயத்துடன் இறந்து கிடப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் உடனே அங்கு சென்றுவிட்டேன். அங்கு அவர் இரத்த வெள்ளத்துடன் இறந்து கிடந்தார். இடது பக்கம் காதிற்கு கீழ் பக்கம் , கழுத்தில் வெட்டுக்காயம், முகம், கை , கால் ஆகியவைகளில் வெட்டுக்காயங்கள் இருந்தது.

போலீசார் வந்து பிரேதத்தை விழுப்புரம் மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தார்கள். என் சித்தப்பா பாளையாவின் மகன் யவுராஜ் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சம்பவ இடத்தில் இரண்டு செல்போன் இருந்தது. போலீசார் அதை கைப்பற்றினார்கள். அந்த இரண்டு செல்போன்களில் ஒன்று எதிரி தமிழ்வாணனுடையது. மற்றொரு செல்போன் சாத்தராஜன் உடையது என்று தெரியவந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

அதன் பிறகு 11.09.2009 ந் தேதி என் சொந்த வேலையாக நானும், என் பெரியப்பா ராமும், பண்ருட்டிற்கு நெல் விதை வாங்குவதற்காக டூ வீலரில் சென்றுக்கொண்டிருந்த போது இரயில்வே கேட் சென்ற போது கண்டமங்கலம் போலீசார் அங்கு இருந்தார்கள். அப்போது அங்கு சித்தப்பா பாளையாவின் கொலை வழக்கில் சம்மந்தப்பட்ட தமிழ்வாணன், சாத்தராஜ். பூபாலன், மணிபாலன், பிரேம்குமார், பாலமுருகன் ஆகியோர்களை போலீசார் பிடித்து வைத்து விசாரித்துக்கொண்டிருந்தாரகள். எங்களை சாட்சியாக இருக்க சொன்னார்கள். நாங்கள் சம்மதம் தெரிவித்தோம். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரான தமிழ்வாணனை சரியாக அடையாளம் காட்டினார். மற்றொரு ஆஜரான எதிரி பூபாலன் என்று கூறினார். ( ஆஜரானவர் பெயர் அறிவழகன்) மற்ற எதிரிகள் அனைவருக்கும் குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**( மற்ற எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக முதல் விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது)**